தீப்பெட்டிகளுக்கு விதிக்கப்படும் எக்சைஸ் தீர்வை.

*வினா எண். 143.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையில் தயாரிக்கப்படும் தீப் பெட்டிகளுக்கு (கார்டு போர்டில் தயாரிக்கப்படுவது) எக்சைஸ் தீர்வையை மத்திய அரசு உயர்த்தியதை குறைக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி: ஆம்.

(முற்பகல் 9-20.)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில்களால் தயாரிக்கப்படும் தீப்பெட்டி களுக்கு மத்திய அரசு உயர்த்திய எக்சைஸ் தீர்வையை குறைப்ப தற்கு நமது மாநில சர்க்கார் கோரிக்கை விடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்போது எவ்வளவு எக்சைஸ் தீர்வை இருக்கிறது? அதை எவ்வளவு குறைப்பதற்கு மாநில அரசு மத்திய அரசிற்கு எழுதி யுள்ளது? அது எப்போது முதல் அமலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீக்குச்சிகள் அடங்கிய அட்டைப்பெட்டி களுக்கு 1-3-82-ல் புதியதாக அதிக அளவு ஆயத்தீர்வை விதித் திருக்கிறார்கள். வெளிப்பக்கம் அட்டையுள்ள தீப் பெட்டிகளுக்கு ரூ. 5.14; உள்பக்கம் அட்டையால் செய்யப்பட்ட தீப்பெட்டி களுக்கு ரூ. 5.26; தீப்பெட்டிகள் உள்பக்கம், வெளிப்பக்கம் ஆகிய இரண்டு பாகங்களிலும் அட்டையால் தயாரிக்கப்பட்டவை களுக்கு ரூ. 4.90 ஆயத்தீர்வை வசூல் செய்து கொண்டிருக் கிறார்கள். அதனை கூட்டுறவுத் துறையில் இருக்கிற தீப்பெட்டித் தொழில் கூடங்களுக்கு குறைக்கவேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறது. ரூ. 2.60 ஆக அதனை குறைக்க வேண்டுமென்று மத்திய அரசிற்கு தமிழக அரசு வற்புறுத்தி எழுதியிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறுதொழில்களால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு அதனு டைய வளர்ச்சியை கருதி மாநில அரசு வேறு ஏதேனும் சலுகைகள் அளித்திருக்கிறதா? தீப்பெட்டித் தொழிலில் பயிற்சி யாளர்களுக்கு உதவித் தொகையை அதிகம் அளிக்க அரசிற்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான வசதிகளை தமிழக அரசு செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்விகேட்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

விரைவில் வளரும் மரங்களை நடுவதற்கான திட்டம்.

*வினா எண். 144—திரு. ஏ. சி. சண்முகம்: திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77 வரவு செலவுத்திட்டத்தில் விரைவில் வளரும் மரங்களை நடுவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் கைவிடப்பட்டது என்று கூறுவது சரியல்ல. விரைவில் வளரும் மரங்களை நடுதல் என்ற திட்டத்தின் பெயர் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ''மரக்கூழ் உற்பத்தித் தோட்டங்களுக்கான திட்டம்'' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1976-77-இல் மரக்கூழ் உற்பத்தித் தோட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 25.08 இலட்சத்தில் ரூ. 21.97 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படக்கூடிய வகையில் கடந்த ஆண்டு, இந்த ஆண்டு, எதிர் வருகிற நிதியாண்டில் அதிகத் தொகை ஒதுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 1977-78-ல் ரூ. 31.38 லட்சம்; 1978-79-ல் ரூ. 27.76 லட்சம்; 1979-80-ல் ரூ. 26.31 லட்சம்; 1980-81-ல் ரூ. 30.84 லட்சம்; 1981-82-ல் ரூ. 36.03 லட்சம்; 1982-83-ல் கூட ரூ. 43.76 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் நடுகிற காலத்தில் காடுகளானாலும் சரி, சாலை ஓரங்கள் ஆனாலும் சரி, பின்னால் பலன் தரக்கூடிய புளிய மரங்களைப் போன்ற மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.